DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
ELUMATHUR VILLAGE IN MODAKURICHI TALUK
**STC.No. 26/2025**

Name : கௌதமன் (PW1)
Date: 12.06.2025
சாட்சி சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறார்.
**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

எனது பூர்வீகம் எந்த ஊர் என்றால் எலவநத்தம் ஆகும். என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் ரியல் எஸ்டேட் கமிசன் அடிப்படையில் செய்து வருகிறேன். நான் என் படித்துள்ளேன் என்றால் 12ம் வகுப்புவரை படித்துள்ளேன். எனக்கு சொந்தமாக அசையும், அசையா சொத்துக்கள் உள்ளதா என்றால் நான் குடியிருக்கும் வீடு உள்ளது. இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனம் உள்ளது. எனது வீடு ஓட்டு வீடாகும். வங்கியில் கடன் பெற்றுள்ளேனா என்றால் கடன் எதுவும் பெறவில்லை. நான்கு சக்கர வாகனம் ரொக்கமாக வாங்கியுள்ளேன். எனக்கு எத்தனை வங்கியில் கணக்கு உள்ளது என்றால் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மூலப்பாளையம் கிளை, மத்திய கூட்டுறவு வங்கி அரச்சலூர் கிளையில் வங்கிகணக்கு மற்றும் முள்ளாம்பரப்பு கிளையில் கரூர் வைஸ்யா வங்கியில் கணக்கு உள்ளது.

2. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா மூலப்பாளையம் கிளையில் வங்கிகணக்கு தொடங்கும்போது கணபதி என்பவர் அறிமுக கையெழுத்து செய்துள்ளாரா என்றால் இல்லை. அதற்குண்டான ஆவணங்களை வரவழைத்து பார்ப்பதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. கணபதி என்பவர் எனக்கு நண்பர். கணபதி த/பெ. கந்தசாமி காசிபாளையம் ஈரோடு என்பவர் எனது நண்பர் என்றால் சரிதான். உறவினர் இல்லை. பாலாஜி பைனான்ஸ் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. ஈரோடு மூலப்பாளையத்தில் உள்ள பாலாஜி பைனான்ஸ் உரிமையாளர் தான் கணபதி என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பாலாஜி பைனான்ஸ்-ல் நான் பணிபுரிவதன் அடிப்படையில் அந்த பாலாஜி பைனான்ஸ் சம்பந்தப்பட்டவங்கி பரிவர்த்தனைகளை இன்று வரை நான் செய்து வருகிறேன் என்றால் இல்லை.

3. ஈரோடு வேலாங்குட்டை தங்கமுத்து அவர்கள் மகன் சக்திவேல் என்பவரை எனக்கு உறவினரா என்றால் இல்லை. அவர் யாரென்று தெரியாது. ஈரோடு மூலப்பாளையம் கே.பி. குமாரசாமி மகன் மனோகரனை தெரியுமா என்றால் தெரியாது. திண்டுக்கல் மாவட்டம்,ஒட்டன்சத்திரம், சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் நான் சாட்சி கையொப்பங்கள் செய்துள்ளேன் என்றால் சரிதான். சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் சுமார் 20 ஆவணங்கள் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் 2 ஆவணங்களில் கையெழுத்து செய்துள்ளேன். அந்த ஆவணங்கள் யார் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் என்றால் கணபதி சம்பந்தப்பட்ட ஆவணங்கள். மனோகரன், சக்திவேல் ஆகியோர்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் எனக்கு அந்த நபர்களின் பெயர் தெரியாது, கணபதி சொன்னதால் சாட்சி கையெழுத்து போட்டேன், அங்கு ஆவணம் ஏற்படுத்தும் போது

சுமார் 10 நபர்கள் இருந்தார்கள். சத்திரப்பட்டி பதிவாளர் அலுவலகத்தில் 167 ஏக்கர் சம்பந்தப்பட்ட கிரைய நடவடிக்கைகளில் கையெழுத்து செய்துள்ளேன் என்றால் எத்தனை ஏக்கர் என்று தெரியாது, ஆனால் கிரைய ஆவணங்களில் கையெழுத்து செய்துள்ளேன்.

4. கணபதி என்பவருக்கும், எதிரிக்கும் உள்ள வரவு செலவு விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் கையெழுத்து செய்த போது இவ்வழக்கின் எதிரி சின்னசாமி இருந்தாரா என்றால் இல்லை. சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் 2 மாதங்களுக்கு முன்பு தான் கையெழுத்து செய்தேன். இரண்டு ஆவணங்களிலும் ஒரே நாள் கையெழுத்து செய்தேனா என்றால் ஆமாம். எதிரி சின்னசாமி சத்திரப்பட்டி சார்பதிவாளர் அலுவலக கிரைய சொத்தை கிரையம் பெற்ற நபர் என்பது தெரியும். கணபதிக்கும், எதிரி சின்னசாமிக்கும் இடையில் திண்டுக்கல் மாவட்ட நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு நடப்பது எனக்கு தெரியும் என்றால் தெரியாது.

5. எதிரி சின்னசாமிக்கு உடன்பிறந்தவர்கள் எத்தனை பேர்கள் என்றால் 2 நபர்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. எதிரி சின்னசாமி எனக்கு உறவினரும் அல்ல, நண்பரும் அல்ல என்றால் நண்பர். சின்னசாமியின் வீடு எங்குள்ளது என்றால் உடுமலைபேட்டையில் சங்கர் லேஅவுட்டில் உள்ளது. எந்த திசை பார்த்துள்ளது என்று தெரியாது. ஆனால் தார்ஸ் வீடாகும். சின்னசாமியின் பொருளாதார பின்னணி எனக்கு ஓரளவுக்கு தெரியும். சின்னசாமிக்கு எத்தனை குழந்தைகள், அவரது மனைவி பெயர் மற்றும் குழந்தைகள் பெயர் தெரியுமா என்றால் ஒரு மகன், ஒரு மகள் உள்ளார்கள். பெயர் தெரியாது. சின்னசாமி என்னென்ன தொழில் செய்து வருகிறார் என்றால் எனக்கு தெரிந்து ரியல் எஸ்டேட் தொழில் தான், மற்ற தொழில்கள் பற்றி தெரியாது. சின்னசாமி வருமானவரி செலுத்தும் நபரா என்றால் செலுத்துவது தெரியும், ஆவணங்களை பார்த்ததில்லை.

6. நான் 5 ஆண்டுகளாக வருமானவரி செலுத்தி வருகிறேன். வருமானவரி கணக்கில் அனைத்து வரவு செலவுகளும் காண்பிக்கப்படுகிறது, எதையும் மறைப்பதில்லை. வழக்கு காசோலை சம்பந்தப்பட்ட கணக்குகள் வருமானவரி கணக்கில் வருகிறது என்றால் வருகிறது. என்னுடைய வருமானவரி கணக்கை என்னால் தாக்கல் செய்யமுடியும். எதிரி அல்லாமல் எத்தனை நபர்களுக்கு கடன் கொடுத்துள்ளேன் என்றால் எதிரியை தவிர இன்னும் 2 நபர்களுக்கு கொடுத்துள்ளேன். காசோலையின் அடிப்படையில் கடன் கொடுக்கும் பழக்கம் இல்லை. நான் வட்டி தொழில் செய்யும் நபர் அல்ல. காசோலையின் அடிப்படையில் கடன் கொடுக்கும் பழக்கம் இல்லாததால் எனக்கு வட்டி தொழிலும் காசோலை வழக்கும் இல்லை என்றால் நான் வட்டி தொழில் செய்யவில்லை, ஆனால் காசோலை வழக்கு உள்ளது.

7. A. சுரேஷ் என்ற நபர் எனது நண்பர் ஆவார். சின்னதுரை என்பவர் யார் என்றால் ஸ்ரீராம் சிட்பண்ட் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். கின்ஸ்செண்ட் ஜோசப் என்ற நபர் அறிமுகம் இல்லை. வெங்கடேஷ் என்பவர் எனக்கு நண்பர், வேறு தொடர்பு எதுவும் இல்லை. சசிகலா என்பவர் எனது பக்கத்து ஊர்க்காரர். வேறு தொடர்பு இல்லை.

M.M. தங்கவேல் யாரென்று தெரியாது. மேற்சொன்ன நபர்களிடம் எனக்கு பண பரிமாற்றம் இருந்ததா என்றால் வரவு செலவு இருந்தது. மேற்சொன்ன நபர்களின் மீது காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனது வருமானவரி கணக்கில் மேற்படி மேலே சொன்ன நபர்களுக்கு கடன் கொடுத்து வாங்கிய குறிப்புகள் உள்ளதா என்றால் உள்ளது. நான் எதிரிக்கு எத்தனை பணம் கொடுத்து வாங்கியுள்ளேன் என்றால் இந்த வழக்கு தொகை தான் முதன்முறையாகும். எதிரி பணம் கேட்ட தேதியன்றே பணம் கொடுத்துவிட்டேனா என்றால் இல்லை, ரெடி செய்து கொடுத்தேன். எந்த வங்கியில் பணம் எடுத்து கொடுத்தேன் என்றால் கரூர் வைஸ்யா வங்கியில் ரூ.5லட்சம் எடுத்தேன், கையில் ரொக்கமாக ரூ.2லட்சம் வைத்திருந்தேன். மேலும் எனக்கு வரவேண்டிய பணம் வந்ததை வைத்து எதிரிக்கு கொடுத்தேன், அது யார் கொடுத்த பணம் என்று ஞாபகம் இல்லை. எனக்கு ஒரு வீடு தான் உள்ளது என்றும், ரூ.10 லட்சம் என்பது எனக்கு பெரிய தொகை என்றால் சரிதான்.

8. எதிரிக்கு ரூ.10 லட்சம் தொகை வட்டிக்கு கொடுத்தேனா என்றால் தெரிந்தவர் என்பதால் கொடுத்தேன். உடுமலைபேட்டைக்கும் என் வீட்டிற்கும் 100 கிலோமீட்டர் இருக்கும். எதிரிக்கு ரூ.10 லட்சம் தொகையை திருப்பி தரும் அளவிற்கு பொருளாதார வசதி உள்ளதா என்பதை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் கணபதி சொல்லி கொடுத்தேன். கணபதி என்ன சொன்னார் என்றால் எதிரியை பற்றி விசாரித்து கொடுக்குமாறு சொன்னார். எதிரியை பற்றி யாரிடம் விசாரித்தேன் என்றால் யாரிடமும் விசாரிக்கவில்லை. எதிரி எத்தனை நாட்களாக எனக்கு தெரியும் என்றால் 2011 லிருந்து எனக்கு தெரியும். என் வீட்டிற்கு எதிரி வந்துள்ளார். 2011ல் எதிரி கணபதி மூலம் எனக்கு அறிமுகம். எதிரி ரியல் எஸ்டேட் மூலமாக பழக்கமானார். நான், எதிரி மற்றும் கணபதி ஆகியோர்கள் கூட்டாக இடம் வாங்கியுள்ளோமா என்றால் இல்லை.

9. எதிரி கடன் கேட்டபிறகு பணம் ஒருவாரம் கழித்து கொடுத்தேன். 2011 லிருந்து 2024 வரை எதிரியிடம் என்னென்ன வியாபார தொடர்பு இருந்துள்ளது என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி காலகட்டத்தில் 4,5 முறை எதிரியை பார்த்துள்ளேன். பணத்தை எதிரி என் வீட்டில் வந்து வாங்கி சென்றார். பணம் வாங்குவதற்கு முன்பாக எதிரி காசோலையை நிரப்பி எடுத்து வந்தார். காசோலையானது எங்கு வைத்து, யாரால் எப்போது பூர்த்தி செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரியிடம் பணத்தை எப்போது திருப்பி தருவீர்கள் என்று கேட்டேனா என்றால் என் வீட்டில் வந்து எதிரி பேசிக்கொண்டிருந்தபோது 3 மாதத்தில் தருவதாக சொன்னார். நான் ஒரு மாதத்தில் திரும்ப தருமாறு கேட்டேனா என்றால் விரைவில் கொடுக்குமாறு சொன்னேன். பணத்தை 3 மாதத்தில் திரும்ப தருவதாக பேசி முடிவு செய்யப்பட்டதா என்றால் ஆமாம், என் வீட்டில் உட்கார்ந்து பேசிய போது தான் முடிவு செய்யப்பட்டதா என்றால் சரிதான்.

10. 3 மாதங்கள் என முடிவு செய்யப்பட்ட பிறகு என்னிடம் பணத்தை பெற்றுக் கொண்டு காசோலையை கொடுத்துவிட்டு எதிரி சென்றுவிட்டாரா என்றால் காசோலையில் கையெழுத்து செய்து விட்டு சென்றார். என் வீட்டில் பணம்

கொடுக்கும்போது நான் மட்டும் தான் இருந்தேன். காசோலையில் கையொப்பம் ஒரு மையாலும், பூர்த்தி செய்யப்பட்ட வேறு மையாலும் உள்ளது என்றால் சரிதான். காசோலையில் பின்பக்கத்தில் கையொப்பங்கள் இருந்ததா என்றால் அதுபற்றி தெரியாது. எதிரி அளித்த பதில் அறிவிப்பில் சில விபரங்களை கேட்டார் என்று அதுபற்றி நான் தெரிந்து கொண்டேனா என்றால் இன்றுவரை தெரிந்து கொள்ளவில்லை. கந்தசாமிபாளையம், சின்னசாமி மகன் ஆறுமுகம் என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. எனது தரப்பில் எதிரி சார்பில் அளிக்கப்பட்ட பதில் அறிவிப்பினை இன்றுவரை படித்து பார்க்கவில்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பில் என்னிடமிருந்து வருமானவரி தாக்கல் நகல், வங்கிகணக்கு பட்டியல், அசையும், அசையா சொத்துக்கள் ஆவணங்கள் கேட்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். என்னிடம் இல்லாததால் தான் எதிரிக்கு அனுப்ப இயலவில்லை என்றால் சரியல்ல. மகாராஷ்டிரா பூனே ஊரை சேர்ந்த சண்முகம் மகன் மகேஸ்குமார் தெரியுமா என்றால் தெரியாது.

11. எதிரியின் சகோதரர் ரங்கசாமி தாராபுரத்தில் வழக்கறிஞராக உள்ளார் என்றால் அதுபற்றி தெரியாது. எதிரியின் சகோதரர் வழக்கறிஞர் ரங்கசாமிக்கு பணதேவை ஏற்பட்டு எதிரியின் உதவியுடன் எனது நண்பர் கணபதியிடம் பணம் கடன் பெற்றார் என்றால் அதுபற்றி தெரியாது. ரங்கசாமியின் கடனுக்கு ஆதரவாக ரங்கசாமியின் காசோலையும், எதிரியின் காசோலையும் கணபதியிடம் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது. ரங்கசாமி கணபதியிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்துவற்காக அவருக்கு பாத்தியப்பட்ட 1 ஏக்கர் நிலத்தை அவரும், அவரது மனைவியும் சேர்ந்து கணபதி மற்றும் அவரது முகவருக்கு கிரையம் கொடுத்து கடனை திருப்பி செலுத்திவிட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. கடனை திரும்ப பெற்றபிறகும் கணபதி எதிரியின் காசோலையை திரும்ப தரவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

12. கணபதி துர்லாபம் அடையவேண்டிய எண்ணத்தில் பாலாஜி பைனான்ஸ்-ல் வேலை செய்யும் எனது பெயரில் காசோலையை பூர்த்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. ரூ.10 லட்சம் கொடுப்பதற்கு எனக்கு போதிய வசதி இல்லை என்று சொன்னால் உள்ளது. வழக்கு காசோலை சட்டப்பூர்வமான தீர்க்கப்படவேண்டிய கடனுக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. கணபதி எனக்கு சுமார் 20 ஆண்டுகளாக பழக்கம். எனக்கும் கணபதிக்கும் வரவு செலவு உள்ளதா என்றால் உள்ளது. வங்கியின் மூலமாக பண பரிமாற்றம் உள்ளது. பாலாஜி பைனான்ஸ் வங்கிகணக்கை வரவழைத்து பார்த்தால் நான் பணிபுரிந்து வருவது தெரியவரும் என்றால் நான் அங்கு பணிபுரியவில்லை.

13. எதிரி எனக்கு அறிமுகம் இல்லாத நபர் என்றும், எதிரியின் வீட்டிற்கு நான் செல்லவில்லை என்றும், 2011 முதல் எனக்கு எதிரியை தெரியாது என்றும், எதிரி என்னிடம் காசோலை கொடுத்து ரூ.10 லட்சம் பெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ரங்கசாமி, எதிரி ஆகியோர் கணபதியிடம் பணம் பெற்றதும், அதற்கு ஆதரவாக

காசோலை கொடுத்தது எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. கணபதி என் மூலமாக எதிரிக்கு எதிராக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. பொய் புகார் கொடுத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

**ஒம்/– சாட்சி கௌதமன்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**எழுமாத்தூர் கிராமம், மொடக்குறிச்சி வட்டம்.**